Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.


மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 223 | உள்ளூர் - 11.08.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 223 | வெளியூர் - 12.08.2026 | புதன்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com


குடும்பத்தில் சண்டைகள் குறைய... ஒற்றுமை பெருக!

பேங்க் ஆப் பரோடாவில் 206 காலியிடங்கள்!

கோயில் நிலங்களுக்கு புதிய ஆபத்தா?

தொகுதி வாரியாக களமிறங்கும் தனுஷ்!

# ரூபாய் சரிவு: நிர்மலா அதிரடி!

# வங்கிகளுக்கு அவசரக் கூட்டம்!

# வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க புதிய திட்டம்!

# ஆக.18–ல் முக்கிய முடிவு?




புதுடெல்லி, ஆக. 11–

அமெரிக்கா–ஈரான் இடையிலான போர் பதற்றம், கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் அந்நிய முதலீடுகள் வெளியேற்றம் காரணமாக இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து அழுத்தத்தை சந்தித்து வருகிறது. இதனை சமாளித்து ரூபாய் மதிப்பை நிலைப்படுத்தவும், நாட்டிற்குள் அதிகளவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும் மத்திய அரசு புதிய நடவடிக்கைகளை ஆலோசித்து வருகிறது.

இதற்காக பொதுத்துறை வங்கிகள் மற்றும் மத்திய அரசின் நிதி நிறுவனங்களின் முக்கிய அதிகாரிகள் பங்கேற்கும் 2 நாள் ஆலோசனைக் கூட்டம் ஆகஸ்ட் 17 மற்றும் 18–ம் தேதிகளில் நடைபெற உள்ளது. எஸ்பிஐ தலைவர் சி.எஸ். ஷெட்டி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் ரூபாய் மதிப்பை வலுப்படுத்துதல், டாலர் வைப்பு நிதிகளை அதிகரித்தல், வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்த்தல் உள்ளிட்ட பல்வேறு வழிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளன.

மேலும், இந்தியாவில் வெளிநாட்டு நிறுவனங்களின் GCC அலுவலகங்கள் அமைப்பது முதல் உள்கட்டமைப்புத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பது வரை பல்வேறு வாய்ப்புகள் ஆய்வு செய்யப்பட உள்ளன. கூட்டத்தில் வங்கிகள் வழங்கும் பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ரூபாய் மதிப்பு ஒரு டாலருக்கு சுமார் ரூ.95 என்ற அளவில் இருப்பதும், கச்சா எண்ணெய் விலை உயர்ந்திருப்பதும் இந்திய பொருளாதாரத்திற்கு கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்த 2 நாள் ஆலோசனைக் கூட்டம் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# செங்கோட்டையில் ‘வந்தே மாதரம்’!



புதுடெல்லி, ஆக. 11–

இந்தியாவின் 80–வது சுதந்திர தினவிழா ஆகஸ்ட் 15, 2026 அன்று டெல்லி செங்கோட்டையில் கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சகம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. இவ்வாண்டு சுதந்திர தின விழாவில் பல வரலா ற்றுச் சிறப்புமிக்க மாற்றங்களும் புதிய அம்சங்களும் இடம்பெறவுள்ளன.

**வந்தே மாதரம் பாடலின் 150–வது ஆண்டு**

பங்கிம் சந்திர சட்டோபாத்யாயால் இயற்றப்பட்டு, இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய ‘வந்தே மாதரம்’ தேசிய பாடல் உருவாக்கப்பட்டதன் 150–வது ஆண்டைக் கொண்டாடும் வகையில், வரலாற்றிலேயே முதன்முறையாக செங்கோட்டை மேடையில் இப்பாடல் முழுமையாகப் பாடப்பட வுள்ளது.

**நிகழ்ச்சி நிரல்**

பிரதமர் நரேந்திர மோடி செங்கோட்டைக்கு வருகை தந்தவுடன் ‘வந்தே மாதரம்’ பாடல் இசைக்கப்படும். அதைத் தொடர்ந்து அவர் தேசியக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார். உரைக்குப்பின் NCC மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து மீண்டும் பாடலையும், தொடர்ந்து தேசிய கீதத்தையும் பாடுவர்.

**மையக்கருத்து**

இந்த ஆண்டின் முக்கியக் கருப்பொருளாக ‘வந்தே மாதரம் 150 ஆண்டுகள்’ மற்றும் ‘விகசித் பாரத் 2047–க்கான யுவ சக்தி’ ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**வான்வெளி அணிவகுப்பு**

இந்திய விமானப்படையின் Mi–17 ஹெலிகாப்டர் ‘வந்தே மாதரம் 150’ என்ற பதாகையை ஏந்தி வந்து, விழா மைதானத்தில் உள்ள மக்கள் மீது பூக்களைத் தூவும். செங்கோட்டைக்கு எதிரே உள்ள ஞான்பாத் பகுதியில் 2,500 தேசிய மாணவர் படை மற்றும் ‘மை பாரத்’ தன்னார்வலர்கள் ‘வந்தே மாதரம்’ என்ற வார்த்தை வடிவில் நின்று சிறப்பிப்பர். வருகை தருபவர்கள் அனைவரும் உடன் சேர்ந்து பாடும் வகையில், அழைப்பிதழில் வந்தே மாதரம் பாடலின் வரிகள் முழுமையாக அச்சிடப்பட்டுள்ளன.

மேலும், ‘சேவா தீர்த்தம்’ மற்றும் ‘தர்ம சக்கரம்’ படங்களும் இடம்பெற்றுள்ளன. VIP கலாச்சாரத்தைக் குறைக்கவும், நீர் வளப் பாதுகாப்பை வலியுறுத்தவும், விருந்தினர்கள் அமரும் பகுதிகள் இந்தியாவின் முக்கிய ஏரிகளின் பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

**சிறப்பு விருந்தினர்கள்**

சர்வதேச கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஒலிம்பியாட் 2026 போட்டிகளில் பதக்கம் வென்ற 19 மாணவர்கள் சிறப்பு விருந்தினர்களாக முதன்மை மேடையில் அமர வைக்கப்படுகின்றனர். இவர்களுடன் இளம் தொழில்முனைவோர்கள், ‘ஸ்டார்ட்–அப்’ அமைப்பாளர்கள், விவசாயிகள், கைவினைஞர்கள் உட்பட சுமார் 5,000 சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்கின்றனர். சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் ஆகஸ்ட் 8 முதல் 15 வரை 343 இடங்களில் முப்படை மற்றும் பாதுகாப்புப் படைகளின் இசைக்குழு க்களின் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் வழியாக ரஷ்யா-இந்தியா புதிய ரயில் பாதை?




மாஸ்கோ, ஆக. 11–

கடல்வழி வர்த்தகப் பாதைகளில் போர் பதற்றம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படும் நிலையில், ரஷ்யாஇந்தியா இடையே புதிய ரயில் வர்த்தகப் பாதையை அமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய துணைப் பிரதமர் மராட் குஸ்னுல்லின், இரு நாடுகளுக்கு இடையே ரயில் பாதை அமைக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளார். இந்தப் பாதை துர்க்மெனிஸ்தான், ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் வழியாக இந்தியாவை இணைக்கும் வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவை அதிகளவில் இறக்குமதி செய்து வருகிறது. தற்போது கடல்வழிப் போக்குவரத்தையே பெரிதும் நம்பியிருக்கும் நிலையில், மாற்று ரயில் பாதை அமைந்தால் வர்த்தகத்திற்கு புதிய வாய்ப்பு உருவாகும். ஹார்முஸ் மற்றும் பாஸ்பரஸ் ஜலசந்திகள் முக்கிய சர்வதேச வர்த்தகப் பாதைகளாக உள்ளன. போர் பதற்றம் காரணமாக இப்பாதைகளில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டால், எரிபொருள் விநியோகம், கப்பல் வாடகை மற்றும் காப்பீட்டுச் செலவுகள் பாதிக்கப்படலாம். ரயில் பாதை அமைந்தால் போக்குவரத்துச் செலவு குறைய வாய்ப்புள்ளது. ஆனால் பல நாடுகளைக் கடந்து செல்ல வேண்டியதால் சுங்கக் கட்டணம், வர்த்தக விதிமுறைகள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பாக பல்வேறு சவால்கள் உள்ளன. குறிப்பாக ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் வழித்தடத்தில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

# இந்தியாவின் புதிய எரிசக்தி ராஜதந்திரம்: இனி ‘நோ டென்ஷன்’!




புதுடில்லி, ஆக. 11–

உலகளவில் கடந்த சில ஆண்டுகளாக தொடரும் போர் மற்றும் அரசியல் பதற்றங்களால் கச்சா எண்ணெய், எரிவாயு விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இதனை சமாளிக்கும் வகையில் இந்தியா தனது எரிபொருள் சப்ளையர் நாடுகளின் எண்ணிக்கை யை கணிசமாக அதிகரித்துள்ளது.

மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபி அளித்த பதிலில், எல்என்ஜி எனப்படும் திரவ இயற்கை எரிவாயுவை வழங்கும் நாடுகளின் எண்ணிக்கை 6–ல் இருந்து 15 ஆகவும், கச்சா எண்ணெய் வழங்கும் நாடுகளின் எண்ணிக்கை 27–ல் இருந்து 41 ஆகவும்உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாஉக்ரைன் போர், மத்திய கிழக்கு பிராந்திய பதற்றம் உள்ளிட்ட காரணங்களால் உலக எரிபொருள் சந்தையில் பல்வேறு காலகட்டங்களில் விநியோக சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால் ஒரே நாடு அல்லது குறிப்பிட்ட ஒரு வழித்தடத்தை சார்ந்திருப்பதை குறைத்து, பல்வேறு நாடுகளிடம் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மூலம் எதிர்காலத்தில் போர் போன்ற அவசர சூழ்நிலைகளிலும் இந்தியாவுக்கு தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதுடன், விலை உயர்வு அபாயத்தையும் கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், எத்தனால் கலப்பு மற்றும் பயோகேஸ் உற்பத்தி போன்ற மாற்று எரிசக்தி முயற்சிகளும் ஊக்குவிக்கப்படுகின்றன.

# தொடர் அமளி: நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைப்பு!



புதுடெல்லி, ஆக. 11–

மக்களவையில் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டு அமளியில் ஈடுபட்டதால், அவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை கூடியதும், நீட் போராட்ட மாணவர்கள் மீதான காவல் துறையின் அத்துமிறல் குறித்து அவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா விளக்கமளிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கங்களை எழுப்பினர். இதையடுத்து, மாநிலங்களவை பகல் 12 வரை ஒத்திவைக்கப்பட்டது.

அதேபோல, மக்களவையில், கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சியினர் தொடர்ந்து முழக்கமிட்டு அமலியில் ஈடுபட்ட நிலையில், மக்களவை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

“அவையில் இடையூறு செய்வது ஜனநாயகத்தின் மாண்புக்கு எதிரானது, அவையில் விவாதங்களும் கலந்துரையாடல்களும் நடைபெற வேண்டும், மாணவர்களின் போராட்ட விவகாரம் குறித்து விவாதிக்க உள்துறை அமைச்சர் தயாராக இருப்பதாக அரசு உறுதியளித்துள்ளது” என்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்தார்.

மேலும், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் கண்ணியத்தைக் காக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.






தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், “போதைப்பொருள்கள் இல்லாத தமிழ்நாடு” – மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில், தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன், காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால், அமலாக்கப் பணியகம் குற்றப்புலனாய்வுத்துறை கூடுதல் காவல்துறை இயக்குநர் கி.சங்கர், சென்னை பெருநகர காவல் ஆணையர் அ. அமல்ராஜ், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். மாலதி ஹெலன், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அதிமுக.,வில் இருந்து மாஜி சண்முகம் நீக்கம்?



சென்னை, ஆக. 11–

சண்முகத்தை கட்சியில் இருந்து நீக்க, பழனிசாமி ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. இது குறித்து, அ.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்கள் சிலர் கூறியதாவது: அ.தி.மு.க., செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களில், தனக்கு எதிரானவர்களை நீக்கி, கட்சியை தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க, பழனிசாமி முயற்சிக்கிறார். ஆனால், சண்முகம் மீது நடவடிக்கை எடுக்காததால், அவரின் ஆளுமை மீது அவரது ஆதரவாளர்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

இது, நெருக்கடியை ஏற்படுத்துவதால், சண்முகத்தை கட்சியில் இருந்து நீக்குவதா அல்லது ‘சஸ்பெண்ட்’ செய்வதா என, பழனிசாமி ஆலோசித்து வருகிறார். முன்னாள் அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர், ‘சண்முகத்தை நீக்கலாம்’ என யோசனை கூறுகின்றனர். அதே நேரத்தில், ‘கட்சியை விட்டு நீக்கினால், த.வெ.க., அரசுக்கு நேரடியாக சண்முகம் ஆதரவளிப்பார். கட்சி தாவல் தடை சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்க முடியாது. அவர் பேசியதை மறந்து விட்டு, அவரை நீக்கியதையே கட்சியினரும் பேசுவர்.

‘சசிகலா, தினகரனை கட்சியில் சேர்க்க வேண்டும் என்ற வேலுமணி முடிவுக்கு சண்முகம் சம்மதிக்காததால், அவர்களுக்குள் இருக்கும் முரண்பாடு பெரிதாக வாய்ப்பு இருக்கிறது. அதுவரை பொறுமையாக இருப்போம்’ என, மணியன் போன்ற மூத்த தலைவர்கள் சிலர், பழனிசாமிக்கு ‘அட்வைஸ்’ செய்துள்ளனர். இதனால், சண்முகம் விஷயத்தில் கடும் குழப்பத்துடன் பழனிசாமி ஆலோசித்து வருகிறார். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 11.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 26-ம் தேதி

## பெரிய நிறுவன ஊழியர்களுக்கு ஆபத்தா? AI குறித்து எச்சரிக்கை!



இந்தியாவின் வேலைவாய்ப்பு சந்தையில் அடுத்த சில ஆண்டுகளில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படலாம். செயற்கை நுண்ணறிவு (AI), ஆட்டோமேஷன் உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சி காரணமாக வேலை செய்யும் முறையே வேகமாக மாறி வருகிறது

கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றத்தைவிட, கடந்த 5 ஆண்டுகளில் தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகம் பல மடங்கு அதிகரித்துள்ளது . புதிய தொழில்நுட்பம் அறிமுகமானவுடன், நிறுவனங்களும் ஊழியர்களும் அதை மிக வேகமாக ஏற்றுக்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது., பெரிய நிறுவனங்கள் எதிர்காலத்தில் அதிகளவிலான பணியாளர்களை குறைக்கும் வாய்ப்பு உள்ளது குறிப்பாக ஒரே ஊழியர் ஒரே வகையான பணியை மட்டும் தொடர்ந்து செய்யும் வேலைகளை AI மற்றும் ஆட்டோமேஷன் மூலம் எளிதில் மாற்ற முடியும்.

பெரிய நிறுவனங்கள் செலவுகளை குறைக்கும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டுவதும் ஊழியர்கள் எண்ணிக்கை குறைவதற்கு மற்றொரு காரணமாக இருக்கலாம். இதனால் பெரிய நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் தங்களது தொழில்நுட்பத் திறன்களை தொடர்ந்து மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில், இந்தியாவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு மற்றும் குறு நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கும் . சிறிய நிறுவனங்களில் ஒரு ஊழியர் பல்வேறு பணிகளை மேற்கொள்வதால், அந்த வேலைகளை முழுமையாக ஆட்டோமேஷன் செய்வது ஒப்பீட்டளவில் சிரமமாக இருக்கலாம்.

எனவே, எதிர்கால வேலைவாய்ப்புக்காக பெரிய நிறுவனங்களை மட்டும் நம்பாமல், சிறு தொழில் நிறுவனங்களையும் தொழில்முனைவோரையும் ஊக்குவிக்க வேண்டும். கொள்கை வகுப்பிலும் சிறு நிறுவனங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

# நவோதயா பள்ளிகள் அமைக்கப்படுமா? - சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு பிரமாண பத்திரம் தாக்கல்!



புதுடெல்லி, ஆக. 11–

தமிழகத்தில் நவோதயா பள்ளிகள் அமைப்பது தொடர்பான வழக்கில், 'மத்திய அரசின் நிர்வாக கொள்கைகளை மாநில அரசு மீது திணிக்க முடியாது' என சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நவோதயா பள்ளிகள் அமைப்பதற்கான நிலத்தை அடையாளம் காணும்படி, தமிழக அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது. மேலும், 'நவோதயா பள்ளிகள் அமைப்பது தொடர்பாக தமிழக அரசின் நிலைப்பாட்டையும் தெரிவிக்க வேண்டும்' என, அறிவுறுத்தி இருந்தது. இதுதொடர்பாக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

கல்வி என்பது அரசியலமைப்பின் பொதுப் பட்டியலில் வருவதால், கொள்கைகளை வகுப்பதற்கும், சட்டங்களை இயற்றுவதற்கும் மாநில அரசுக்கு முழு அதிகாரம் இருக்கிறது. தமிழக அரசு கடந்த 2006–ல் இயற்றிய, 'தமிழ் கற்றல் சட்டத்தின்' கீழ் மாநிலத்தின் அனைத்து பள்ளிகளிலும் தமிழ் மொழி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே, மாநில அரசின் சொந்தச் சட்டங்களுக்கு முரணாக இருக்கும் மத்திய அரசின் நிர்வாகக் கொள்கைகளை செயல்படுத்த முடியாது. நவோதயா பள்ளிகளை அமைக்கும்படி கட்டாயப்படுத்தவோ, தேசியக் கல்விக் கொள்கையை அமல்படுத்தும்படி வற்புறுத்தவோ மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை. நிலக் கொள்கை, நில மேலாண்மை மற்றும் உரிமை மாற்றம் தொடர்பான விவகாரங்கள் முற்றிலும் மாநில அரசின் விருப்ப உரிமைக்கு உட்பட்டவை. எனவே, ஒரு மாநில அரசிடம் இருந்து நிலத்தைப் பெறவோ அல்லது நிலத்தை ஒதுக்கீடு செய்ய கட்டாயப்படுத்தியோ கோர்ட்டு உத்தரவிட முடியாது. இதனால், மாவட்டம்தோறும் நவோதயா பள்ளிகளுக்கு நிலத்தை அடையாளம் காணும்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை சுப்ரீம் கோர்ட்டு திரும்பப் பெற வேண்டும். மத்திய அரசு, 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய 5,109.90 கோடி ரூபாய் நிதியை இன்னும் வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளது. இந்த நிதி விடுவிக்கப்பட்டால், மாநிலத்தில் உள்ள அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்தி, மாணவர்கள் கூடுதல் பயனடைய வழிவகை செய்ய முடியும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மெரினா, பெசன்ட் நகரில் 32 இடங்களில் இலவச 'வைபை' வசதி!




சென்னை, ஆக. 11–

மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை பகுதிகளில், தங்கு தடையின்றி இணையத்தைப் பயன்படுத்தும் வகையில் இலவச 'வைபை' (Wi–Fi) வசதியைத் தமிழக அரசு மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது. தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னையில் மக்கள் அதிகம் வந்து செல்லும் கடற்கரை பகுதிகளான மெரினா, பெசன்ட் நகர் மற்றும் திருவான்மியூர் கடற்கரை பகுதிகளில் முதல்கட்டமாக மக்கள் தங்கு தடையின்றி இணைய பயன்பாட்டை பெறும் வகையில் இலவச 'வைபை' வசதிக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, மெரினா கடற்கரை மற்றும் பெசன்ட் நகர் கடற்கரையில் 32 இடங்களில் பயன்பாட்டில் இல்லாத இலவச 'வைபை' வசதி பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை 27 இடங்களிலும், பெசன்ட் நகர் கடற்கரை பகுதியில் 5 இடங்களிலும் இலவச 'வைபை' வசதி பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

பொதுமக்கள் தங்கள் செல்போனில் 'வைபை' ஆன் செய்து 'கிளிக்' செய்தவுடன் வரும் கியூ–ஆர் கோர்டை 'கிளிக்' செய்து செல்போன் எண்ணுக்கு வரும் ஓ.டி.பி எண்ணை பதிவு செய்த உடன் 'வைபை' இணைப்பு ஏற்படும். இதன் தொடர்ச்சியாக, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான இதர கடற்கரைப் பகுதிகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் உள்ளிட்ட இடங்களில் பயன்பாட்டில் இல்லாத 'வைபை' வசதியை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டுவரவும், புதிய 'வைபை' வசதியை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காட்டுத்தீ: சதுரகிரி மலைக்கு செல்ல பக்தர்களுக்கு தடை!




விருதுநகர், ஆக. 11–

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு தாணிப்பாறை மலைப்பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டு மலையின் கீழ் பகுதியை நோக்கி பரவி வருகிறது. தீயை கட்டுப்படுத்தும் பணியிலும், மலையில் காற்றின் வேகம் திசை மற்றும் சூழலை கண்காணிக்கும் பணியிலும் களப்பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது நிலவும் தீ பரவும் சூழல் பக்தர்கள் மற்றும் பார்வையாளர்களின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படக்கூடியதை கருத்தில் கொண்டு நிலைமை பாதுகாப்பானதாகவும், இயல்பானதாகவும் மாறும் வரை பொதுமக்கள் சதுரகிரி மலைக்கோவிலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ந்து எரியும் தீ மற்றும் களநிலவரத்தை கருத்தில் கொண்டு இன்று காலை 8 மணிக்கு முன்னதாக பக்தர்கள் அல்லது பார்வையாளர்கள் சதுரகிரி மலைப்பகுதிக்குள் நுழைய அனுமதி இல்லை. நுழைவு நேரம் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவை அப்பகுதியில் நிலவும் தீ மற்றும் பாதுகாப்பு சூழ்நிலையை பொருத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும் அசம்பாவிதங்களை தவிர்க்கும் வகையிலும் இன்று சதுரகிரிக்கு செல்வதை பக்தர்கள் தவிர்க்க வேண்டும் என வனத்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். காட்டுத்தீயின் தன்மையைப் பொறுத்து நாளை ஆடி அமாவாசை அன்று பக்தர்களை அனுமதிப்பது குறித்து முடிவு செய்யப்படும் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## சினிமா துளிகள்..!

## அஜித்தின் 'டேர் டெவில்' படத்தில் இணையும் பிரபல நடிகர்கள்!



அஜித்தின் சர்வதேச மோட்டார் ஸ்போர்ட்ஸ் பயணத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள 'கிளாடியேட்டர்ஸ் இன் பர்சூட் ஆஃப் சேலஞ்சஸ்' ஆவணப்படத்தை இயக்குநர் ஏ.எல். விஜய் இயக்கியுள்ளார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இந்த படம் விரைவில் வெளியாக உள்ளது. அதனை தொடர்ந்து, 'குட் பேட் அக்லி' படத்தைத் தொடர்ந்து இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரனுடன் அஜித் மீண்டும் இணைந்துள்ளார். அஜித்தின் 64–வது திரைப்படமாக உருவாக உள்ள இந்தப் படத்திற்கு 'டேர்டெவில்' என்று பெயரிடப்பட்டுள்ளது. பிரேவ் ஹார்ட்ஸ் புரடக்ஷன்ஸ் என்கிற பெயரில் ஷாலினி அஜித்குமார் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். சமீபத்தில் வெளியான இந்த அறிவிப்பு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

ஷாலினி தயாரிக்கும் "டேர் டெவில்" படத்தின் படப்பிடிப்பு வரும் செப்டம்பரில் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது. நடிகர் அஜித் இந்த படத்திற்கான படப்பிடிப்பை ஒரே கட்டமாக நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

பான் இந்தியா திரைப்படமாக உருவாகவுள்ள 'டேர் டெவில்' படத்தில் பிரபல நடிகர்களை கேமியோ கதாபாத்திரங்களில் நடிக்க வைக்க படக்குழு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. குறிப்பாக, வெங்கடேஷ் மற்றும் மோகன்லால் ஆகிய இருவரையும் கேமியோ ரோலில் நடிக்க வைக்க படக்குழு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுகுறித்து படக்குழு தரப்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை.

# தொகுதி வாரியாக களமிறங்கும் தனுஷ்?




சென்னை, ஆக. 11–

நடிகர் விஜய் நடிகராக இருந்து அரசியலில் குதித்து ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில், இதே பாணியில் மற்ற நடிகர்களும் அரசியலுக்கு வருவார்களா என்ற எதிர்பார்ப்பு சினிமா மற்றும் அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது. நடிகர்கள் தனுஷ், விஷால் உள்ளிட்டோர் அரசியல் தொடர்பாக பேசி வருவதும் இந்த எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

இதற்கிடையே, நடிகர் தனுஷின் சமீபத்திய நடவடிக்கைகள் அவரது அரசியல் வருகை குறித்த புதிய யூகங்களை ஏற்படுத்தியுள்ளன. இதுவரை தனது அரசியல் வருகை குறித்து தனுஷ் வெளிப்படையாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. இருப்பினும், மறைமுகமாக அதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

சமீபத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பேசிய தனுஷ், "நமது கூட்டத்துக்கு ஒரு நோக்கம் இருக்கிறது" என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து தனது பிறந்தநாளையொட்டி, போயஸ் கார்டனில் உள்ள தனது வீட்டில் ரசிகர்களை நேரில் சந்தித்தார்.

இதன் தொடர்ச்சியாக தற்போது தனது நற்பணி மன்றத்தை பலப்படுத்தும் முயற்சியில் தனுஷ் இறங்கியுள்ளதாதகதகவல் வெளியாகியுள்ளது. குறிப்பாக, தமிழகம் முழுவதும் சட்டமன்ற தொகுதி வாரியாக நற்பணி மன்றத்தை வலுப்படுத்த அவர் அறிவுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.


இதன் முதற்கட்டமாக கோவை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் புதிதாக இயக்கத்தை தொடங்குவதுடன், உறுப்பினர்களை சேர்க்கும் பணிகளை மேற்கொள்ள இரண்டு மாவட்ட தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. முதல் பிரிவில் கோவை தெற்கு, தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை ஆகிய 5 தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

இரண்டாவது பிரிவில் கோவை வடக்கு, கவுண்டம்பாளையம், சிங்காநல்லூர், சூலூர், மேட்டுப்பாளையம் ஆகிய 5 தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு கோவை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளிலும் நற்பணி மன்றத்தை அமைப்பு ரீதியாக வலுப்படுத்தும் பணிகள் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல், தமிழகத்தின் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் தொகுதி வாரியாக நற்பணி மன்றத்தை பலப்படுத்தி, உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கூறப்படுகிறது.

தனுஷ் இதுவரை தனது அரசியல் வருகை குறித்து வெளிப்படையாக அறிவிக்காத நிலையில், சட்டமன்ற தொகுதி வாரியாக நற்பணி மன்றத்தை கட்டமைக்கும் இந்த நடவடிக்கை, அவரது அடுத்தகட்ட அரசியல் நகர்வு குறித்த எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.



## குடும்பத்தில் சண்டைகள் குறைய... ஒற்றுமை பெருக!



குடும்ப வாழ்க்கையில் ஏதேனும் ஒரு பிரச்சனைகள் அல்லது முக்கிய பொறுப்புகளை முடிக்க வேண்டிய சூழல் நிறைந்திருக்கும். இருப்பினும் அதற்காக குடும்பத்தில் உங்கள் துணை அல்லது, குடும்ப உறுப்பினர்களிடம் சண்டை அல்லது கருத்து வேறுபாடுகள் அடிக்கடி ஏற்படுவது சரியான விஷயமாக கருதப்படுவதில்லை. ஒருவருடைய வீட்டில் அமைதியும் மகிழ்ச்சியும் இல்லாவிட்டால், தேவையற்ற கருத்து வேறுபாடுகள் கூடிக் கொண்டே செல்லும். அதற்கான காரணம் என்ன? அவற்றை தீர்க்க சில எளிய பரிகாரங்கள் இங்கு பார்ப்போம்.

**உலர்ந்த துளசி செடி**

வீட்டின் எதிர்மறை ஆற்றல் நிறைந்திருந்தால் அந்த வீட்டில் தேவையற்ற உனக்கு வாதங்களும் சண்டைகளுக்கும் வழிவகுக்கும். உங்களுடைய வீட்டில் துளசி செடி வளர்த்து வந்தால் அதை ஒருபோதும் வாட விட வேண்டாம். உலர்ந்த நிலையில் துளசி செடி வைத்திருப்பதால் வீட்டில் தேவைப்பட்ட எதிர்மறை ஆற்றல் அதிகரித்து, கஷ்டங்களும், வாக்குவாதங்களும் ஏற்படும் சூழல் உருவாகும். அதனால் துளசி செடியை பசுமையாக வைத்து பராமரிக்கவும். மேலும் தினமும் துளசி செடியை வழிபடுவது நன்மை தரும்.

**உப்பு நீரால் தரையை துடைத்தல்**

உங்களுடைய வீட்டில் உள்ள கண் திருஷ்டி மற்றும் எதிர்மறை ஆற்றல் விலக, வாரத்திற்கு குறைந்தது இரண்டு அல்லது மூன்று முறையாவது சிறிதளவு மஞ்சள் தூளும், உப்பு கலந்து நீரால் தரையே துடைப்பது அவசியம். இது உங்களுடைய வீட்டில் நேர்மறையான ஆற்றலையும் அமைதியான சூழலையும் கொண்டு வரும். மேலும் வீட்டில் கிருமிகளும் அழியும்.

**உடைந்த சிலைகள்**

உங்கள் வீட்டில் எந்த பகுதியில் உடைந்த சிலைகளை வைத்திருக்கக் கூடாது. வீட்டில் உடைந்த சிலைகளை வைத்திருப்பதால், நேர்மை ஆற்றலை விட எதிர்மறை ஆற்றல்கள் அதிகமாக தரும் நினைவே உங்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவ வேண்டும் எனில், அப்பொழுது இந்த சிலைகளை உடனடியாக அகற்றவும்.

**சூரிய வழிபாடு**

தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்வதும் குளித்துவிட்டு சூரியனை வழிபாடு செய்வதும் உங்களுடைய ஜாதகத்தில் சூரியனுடைய பலத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், உங்கள் வீட்டின் சூழலும் நேர்மறை ஆற்றலால் நிரம்பி இருக்கும்.

**கங்கை நீர் தெளிக்கவும்**

உங்களுடைய வீட்டில் மங்கலம் நிறையவும், வீட்டில் உள்ள எதிர்மறை ஆற்றல்கள் நீங்கவும், வீடு முழுவதும் கங்கை நீரை தெளிக்கவும்.

**உடைந்த கண்ணாடி ;**

வீட்டில் சரியான இடத்தில் கண்ணாடி வைப்பது மிகவும் மங்களகரமானதாக கருதப்படுகிறது. இது வீட்டினுடைய அழகையும் நேர்மறை ஆற்றலையும் அதிகரிக்கும்.. அதே சமயம் உடைந்த கண்ணாடியை வீட்டில் வைத்திருப்பது, வாஸ்து சாஸ்திரத்தின்படி எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே உங்களுடைய உடைந்த கண்ணாடியை உடனடியாக வீட்டில் இருந்து அகற்றுவது நல்லது. இது தேவையற்ற கருத்து வேறுபாடுகளையும் , உறவுகள் இடையே மன வருத்தத்தை அதிகரிக்கும்.

**பொறுப்பு துறப்பு:**

இந்தக் கட்டுரையில் உள்ள தகவல்கள் முற்றிலும் உண்மையானவை அல்லது துல்லியமானவை என்று நாங்கள் கூறவில்லை. விரிவான தகவல்களுக்கு, தொடர்புடைய துறையில் உள்ள நிபுணரை அணுகவும்.

# ராக்கெட் வேகத்தில் உயரும் தங்கம் விலை!



சென்னை, ஆக. 11–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 300 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,250–க்கும் சவரனுக்கு 2400 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 14 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரே நாளில் தங்கம் சவரனுக்கு 2400 ரூபாய் உயர்ந்துள்ளது தங்கம் வாங்குவோர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில தினங்களாக விலை மாற்றமின்றி விற்பனையான வெள்ளி விலை இன்று உயர்ந்துள்ளது. கிராமுக்கு 10 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 260 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




## எந்த நிலையில் தூங்குவது நல்லது?



அனைவருக்கும் ஒரே தூங்கும் நிலை சிறந்தது என்று கூற முடியாது. வயது, உடல்நிலை, உடல் அமைப்பு மற்றும் தனிப்பட்ட சௌகரியத்தைப் பொறுத்து தூங்கும் நிலையைத் தேர்வு செய்ய வேண்டும்.

பக்கவாட்டில் தூங்குவது சுவாசப்பாதையை ஓரளவு திறந்த நிலையில் வைத்திருக்க உதவுவதால், குறட்டை மற்றும் சில தூக்கச் சுவாசப் பிரச்சனைகளை குறைக்கலாம். கர்ப்ப காலத்தின் பிற்பகுதியிலும் பக்கவாட்டில் படுப்பது பயனுள்ளதாக இருக்கலாம். முழங்கால்களுக்கு இடையில் தலையணை வைப்பது உடல் நிலையை சீராக வைத்திருக்க உதவும்.

முதுகில் படுப்பது முதுகெலும்பை இயல்பான நிலையில் வைத்திருக்க உதவலாம். ஆனால் சிலருக்கு இது குறட்டை மற்றும் தூக்கத்தில் சுவாசத் தடையை அதிகரிக்கக்கூடும்.

குப்புறப் படுப்பது கழுத்தை நீண்ட நேரம் ஒரு பக்கமாகத் திருப்ப வேண்டிய நிலையை ஏற்படுத்துவதால், கழுத்து, தோள் மற்றும் முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

தூங்கும் நிலையைப் போலவே தலையணை மற்றும் மெத்தையின் ஆதரவும் முக்கியம். மிகவும் உயரமான அல்லது தாழ்வான தலையணையை தவிர்க்க வேண்டும்.

தொடர்ந்து மூச்சுத்திணறல், அதிக குறட்டை, உடல் வலி, கை–கால்களில் உணர்வின்மை அல்லது அடிக்கடி தூக்கம் கலைதல் போன்ற பிரச்சனைகள் இருந்தால் மருத்துவரை அணுகுவது அவசியம்.

முக்கியமாக, நல்ல தூக்கத்திற்கு சரியான நேரத்தில் படுப்பது, திரைப் பயன்பாட்டை குறைப்பது, அதிக காஃபின் மற்றும் உணவைத் தவிர்ப்பதும் உதவும்.

# கோயில் நிலங்களுக்கு புதிய ஆபத்தா?




சென்னை, ஆக. 11–

இந்து சமய அறநிலையத் துறையில், உதவி ஆணையர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளுக்கு சட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்த்தி, வருவாய் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களை அறநிலையத் துறையில் நியமிக்க அரசு முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நடவடிக்கை, அறநிலையத் துறைக்குரிய தனித்துவத்தை குலைத்து விடும் என புகார் எழுந்துள்ளது.

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் 43,728 கோவில்கள் உள்ளன. இவற்றை நிர்வகிக்க ஆய்வாளர் முதல் கூடுதல் ஆணையர் வரை சுமார் 800 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். ஒவ்வொரு அதிகாரியும் பல கோவில்களை கவனிக்க வேண்டியுள்ளதால், அவர்களுக்கு பணிச்சுமையும் அதிகமாக உள்ளது.

கோவில் செயல் அலுவலர் பணிகளுக்கு அரசு பணியாளர் தேர்வாணையமான டி.என்.பி.எஸ்.சி. மூலம் ஆட்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். செயல் அலுவலர் நான்காம் நிலை பணிக்கு 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்பணியில் சேருவோர் அடுத்தடுத்த நிலைகளுக்கு பதவி உயர்வு மூலம் வருகின்றனர்.

முதல் நிலை செயல் அலுவலர் மற்றும் உதவி ஆணையர் பதவிகளுக்கு டி.என்.பி.எஸ்.சி. மூலம் தேர்வு செய்யப்படும்போது, சட்டப்படிப்பு முடித்திருப்பது அவசியமாக உள்ளது. கோவில் நிலங்களை பாதுகாப்பது இவர்களின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். கோவிலுக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துகள் தொடர்பாக ஏராளமான வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

இவற்றை எதிர்கொள்ள உதவி ஆணையர் பதவிக்கு வருவோருக்கு சட்ட அறிவு அவசியம் என்பதால் இந்த விதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும், இப்பதவிக்கு வருவோர் இந்து சமயம் குறித்தும் படித்து வருகின்றனர். இதுவே இந்து சமய அறநிலையத் துறையின் தனித்துவமாக கருதப்படுகிறது. இதன் காரணமாக பிற துறை அலுவலர்கள் இத்துறைக்கு வர முடியாத நிலை இருந்து வருகிறது.

ஆரம்பத்தில் அறநிலையத் துறை கமிஷனராக பதவி உயர்வு வாயிலாக அந்தத் துறை அலுவலர்களே நியமிக்கப்பட்டனர். பின்னர் அந்த நடைமுறை மாற்றப்பட்டு, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் படிப்படியாக வருவாய் துறையினரை இந்து சமய அறநிலையத் துறைக்குள் கொண்டு வருவதாக புகார் எழுந்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் கோவில் நிலங்கள் தொடர்பான பிரச்னைகளை தீர்க்க, மண்டல அளவில் மாவட்ட வருவாய் அலுவலர்களும், ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவிலும் தனி தாசில்தாரும், தலைமையிடத்தில் இரு தாசில்தார்களும் நியமிக்கப்பட்டனர். கோவில் நிலங்களை பாதுகாத்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், தனியார் வசமுள்ள கோவில் நிலங்களை மீட்டெடுத்தல் உள்ளிட்ட பணிகளில் அவர்கள் உதவுவார்கள் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அவர்களால் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. எந்தப் பிரச்னையாக இருந்தாலும் உதவி ஆணையருடன் வர வேண்டும் என்ற நிலை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், உதவி ஆணையர் பதவிக்கு வருவாய் துறை உள்ளிட்ட பிற துறை அலுவலர்களை கொண்டு வருவதற்கு வசதியாக, சட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்த்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான சட்டத் திருத்த மசோதா சட்டப்பேரவை கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த சட்டத் திருத்தம் நிறைவேறினால் அறநிலையத் துறை அழிவுப் பாதைக்கு செல்லும் என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். சட்டம் தெரியாத பிற துறை அலுவலர்கள் வந்தால், கோவில் நிலங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளை எதிர்கொள்வதில் சிக்கல் ஏற்படலாம் என்றும், நிலம் குறித்த புரிதல் இல்லாமல் கோவில் சொத்துகளை இழக்க நேரிடும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

ஏற்கனவே நில மோசடி, ஆக்கிரமிப்பு உள்ளிட்ட காரணங்களால் கோவில் நிலங்களின் அளவு குறைந்து வருவதாக கூறப்படும் நிலையில், உதவி ஆணையர் பதவிக்கான தகுதியை தளர்த்துவது கோவில் நிலங்களை பாதுகாப்பதை மேலும் கடினமாக்கும் என ஆன்மிகவாதிகள் தெரிவிக்கின்றனர்.

கோவில் நிலங்களை ஆக்கிரமிக்கவும், அறநிலையத் துறையை வருவாய் துறையின் அங்கமாக மாற்றவும் இந்த சட்டத் திருத்தம் வழிவகுக்கும் என்பதால், அரசு இதனை அனுமதிக்கக்கூடாது என்பதே ஆன்மிகவாதிகளின் விருப்பமாக உள்ளது.

# வேலை வாய்ப்பு

## பேங்க் ஆப் பரோடாவில் 206 காலியிடங்கள்!




வங்கி வேலை தேடும் பட்டதாரிகளுக்கு முக்கிய வாய்ப்பு! வங்கி ஆஃப் பரோடாவில் (Bank of Baroda) 206 Specialist Officer (SO) பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பணி: Specialist Officer (SO)

காலியிடங்கள்: 206

பணியிடம்: இந்தியா முழுவதும்

பணி வகை: நிரந்தரப் பணி

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் – https://bankof–baroda.bank.in/

விண்ணப்ப தொடக்கம்: 06.08.2026

கடைசி நாள்: 26.08.2026

அறிவிப்பு எண்: BOB/HRM/REC/ADVT/2026/15

தகுதி, வயது வரம்பு, சம்பளம், தேர்வு முறை உள்ளிட்ட முழுமையான விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்த்து, தகுதியானவர்கள் கடைசி தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: Bank of Baroda Careers or https://bankofbaroda.bank.in/

**குறிப்பு:** விண்ணப்பிக்கும் முன் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பை சரிபார்க்கவும். Bank of Baroda தனது Career பக்கத்தில் ஆட்சேர்ப்பு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது.

# கோயில் நிர்வாகத்தில் அதிரடி மாற்றம்! அறங்காவலர்களை தேர்வு செய்ய புதிய 7 பேர் குழு!




சென்னை, ஆக. 11–

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களுக்கு பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர்களை தேர்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக, மயிலம் பொம்மபுரம் ஆதீனம் தலைமையில் 7 பேர் கொண்ட புதிய மாநிலக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசாணையை இந்து சமய அறநிலையத் துறை செயலர் ஜெ.குமரகுருபரன் வெளியிட்டுள்ளார். தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களுக்கு தகுதியான பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர்களை தேர்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக ஏற்கெனவே மாநில அளவில் குழு செயல்பட்டு வந்தது. அந்தக் குழுவின் 2 ஆண்டு பதவிக்காலம் கடந்த ஜூலை 24–ம் தேதியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து புதிய குழுவை அமைக்க அறநிலையத் துறை ஆணையர் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனை ஏற்று, ஆண்டுக்கு ரூ.10 லட்சத்துக்கும் அதிகமாக வருவாய் ஈட்டும் கோயில்களுக்கு பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர்களை தேர்வு செய்து, அரசுக்கு பரிந்துரை செய்யும் வகையில் புதிய மாநிலக் குழு தற்போது அமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய குழுவின் தலைவராக மயிலம் பொம்மபுரம் ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள்நியமிக்க ப்பட்டுள்ளார். துணைத் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி கே.ராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், குழுவின் உறுப்பினர் செயலராக இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் செயல்படுவார்.

குழுவின் உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ப.ரா.சம்பத், திரைப்படத் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி அகோரம், பின்னணி பாடகர் த.வேல்முருகன், ஆன்மிகப் பேச்சாளர் மா.சுமதி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

புதிய குழுவின் முக்கியப் பணியாக, ஆண்டுக்கு ரூ.10 லட்சத்துக்கும் அதிகமாக வருவாய் வரும் கோயில்களுக்கு தகுதியான பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர்களை தேர்வு செய்வதும், அவர்களின் பெயர்கள் அடங்கிய உரிய பரிந்துரை பட்டியலை அரசிடம் சமர்ப்பிப்பதும் இருக்கும்.

இதன் மூலம் அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அதிக வருவாய் கொண்ட கோயில்களில் அறங்காவலர்களை நியமிக்கும் பணிகள் புதிய குழுவின் மூலம் முன்னெடுக்கப்பட உள்ளன. புதிய குழுவின் செயல்பாடுகள் கோயில் நிர்வாகத்தில் முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பென்ஷன் ரூ.45,000 ஆகுமா?



புதுடெல்லி, ஆக. 11–

8–வது சம்பள கமிஷனில் ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.45,000 குறைந்தபட்ச பென்ஷன் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாரத் பென்ஷன் சமாஜ் அமைப்பு, விலைவாசி மற்றும் மருத்துவச் செலவுகள் அதிகரித்துள்ளதால் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை ரூ.9,000–ல் இருந்து ரூ.45,000 ஆக உயர்த்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. மேலும், மத்திய அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச அடிப்படை சம்பளத்தை ரூ.69,000 ஆக உயர்த்தவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

7–வது சம்பள கமிஷனில் 2.57 ஆக இருந்த ஃபிட்மென்ட் ஃபேக்டரை 3.83 ஆக உயர்த்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்வை ஆண்டுக்கு 2 முறைக்கு பதிலாக காலாண்டுக்கு ஒருமுறை வழங்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் தற்போது கோரிக்கைகள் மட்டுமே; இறுதி முடிவு இன்னும் வெளியாகவில்லை. 8–வது சம்பள கமிஷன் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது.

புதிய சம்பளம் மற்றும் ஓய்வூதியம் 2028 ஜனவரி 1 முதல் அமலுக்கு வர வாய்ப்புள்ளதாகவும், தாமதமான காலத்திற்கான தொகை அரியராக வழங்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நல்லாறு பாதுகாப்பு இயக்கம் சார்பில் தூர்வாரும் பணி 2-ம் கட்ட துவக்க விழா!



திருப்பூர், ஆக. 11–

நல்லாறு பாதுகாப்பு இயக்கம் அனைத்து ரோட்டரி சங்கங்கள் மற்றும் திருமுருகன்பூண்டி நகராட்சி சார்பாக நகர மன்ற தலைவர் நா.குமார் அவர்களின் பெரும் முயற்சியில் நல்லாறு தூர்வாரும் பணி 2ம் கட்ட துவக்க விழா பூண்டி பாலம் அருகில் நடைபெற்றது.

திருமுருகன்பூண்டி ஆணையாளர் பாலமுருகன் தூர்வாரும் பணியினை துவக்கி வைத்தார் இந்த நிகழ்வில் முன்னாள் நகர மன்ற தலைவர் திருமதி லதா,மற்றும் நகர மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் இயக்க செயல்பாடுகளை குறித்து கோவிந்தராஜ்,வெங்கடாசலம், நட்ராஜ்,அருணாச்சலம், பாலசுப்ரமணியம், ஆகியோர் திட்டத்தின் செயல்பாடுகளை குறித்து மக்களிடையே கருத்துக்களை எடுத்துரைத்தனர்

# திருச்செந்தூர் கோயிலில் தரிசன நேரம் நீட்டிப்பு!




திருச்செந்தூர், ஆக. 11–

பக்தர்களின் அதிருப்தியைத் தொடர்ந்து, திருச்செந்தூர் முருகன் கோயிலில் இரவு 8 மணி வரை தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகாலை 4 மணிக்கே நடை திறக்கப்படும் என கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

# மருத்துவ படிப்பு தரவரிசை வெளியீடு!




சென்னை, ஆக. 11–

தமிழகத்தில் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. 7.5% உள் இடஒதுக்கீட்டின் கீழ் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 537 எம்பிபிஎஸ், 104 பிடிஎஸ் என மொத்தம் 641 இடங்கள்ஒதுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 72,633 பேர் விண்ணப்பித்த நிலையில், விழுப்புரத்தைச் சேர்ந்த வெங்கடபதி வேலாயுதம் 705 மதிப்பெண்களுடன் தமிழகத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.

ஆகஸ்ட் 13–ம் தேதி முதல் பொதுப் பிரிவு கலந்தாய்வு தொடங்குகிறது. அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% ஒதுக்கீட்டு கலந்தாய்வும் அதே நாளில் நடைபெறுகிறது.




# வங்கி ஊழியர்களுக்கு புதிய சவால்!



புதுடெல்லி, ஆக. 11–

டிஜிட்டல் பேங்கிங், AI மற்றும் ஆட்டோமேஷன் வளர்ச்சியால் வங்கிகளின் வழக்கமான பணிகள் வேகமாக மாறி வருகின்றன. HDFC, ICICI, Axis உள்ளிட்ட முன்னணி தனியார் வங்கிகள் கடந்த நிதியாண்டில் 13,000–க்கும் மேற்பட்ட ஊழியர்களை குறைத்துள்ளன. பல பேக்–எண்ட் பணிகள் தற்போது மென்பொருள் மூலம் தானியங்கியாக நடைபெறுகின்றன.

இதனால் வங்கி ஊழியர்கள் இனி வாடிக்கையாளர் சேவை, விற்பனை, டேட்டா அனாலிசிஸ் உள்ளிட்ட கூடுதல் பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வங்கி வேலையில் நீடிக்க தொழில்நுட்பம் மற்றும் விற்பனைத் திறன் முக்கியமாகும் என கூறப்படுகிறது.

# சேவை குழு சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!



திருப்பூர், ஆக. 11–

தமிழக வெற்றிக் கழகம் சேவைக் குழு சார்பில் 2–வது மாதம் முதியோர் வாழ்நாள் நலத்திட்ட உதவிகள் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆணைக்கிணங்க திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் வாழ்த்துக்களோடு திருப்பூர் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் குத்புதீன் தலைமையில் வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் ஒருங்கிணைப்பு ரஹ்மத்துல்லாஹ், அசாருதீன் ஜெயராஜ் மற்றும் சேவை குழு நிர்வாகிகள் பகுதி வார்டு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கொலம்பியாவை உலுக்கிய பயங்கர நிலநடுக்கம்! பலி - 111




கொலம்பியா, ஆக. 11–

மேற்கு கொலம்பியாவில் ஏற்பட்ட 7.4 ரிக்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 111 பேர் உயிரிழந்தனர்; 87 பேர் காயமடைந்தனர். 61 கட்டடங்கள் இடிந்து விழுந்ததுடன், 1,575 வீடுகள் சேதமடைந்தன. வெனிசுலா, ஈக்குவடாரிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது. விமான நிலையங்கள் மூடப்பட்ட நிலையில், நாடு தழுவிய அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.



# இன்றைய கார்ட்டூன்




## பத்திரப்பதிவை தடை செய்து மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சொத்துக்களை பாதுகாத்தோம்- பி.கே. சேகர்பாபு!

சென்னை, ஆக. 11–

தி.மு.க முன்னாள் அமைச்சரும் எம்.எல்.ஏ.வுமான பி.கே.சேகர்பாபு நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது:–

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் சொத்துக்களைப் பாதுகாத்த ஆட்சி, திராவிட மாடல் ஆட்சிதான். 2016–ம் ஆண்டிலேயே அந்தச் சொத்துக்களின் பத்திரப் பதிவிற்குத் தடை கோரி, அன்றைய மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து, 2021–ம் ஆண்டிலிருந்து வெவ்வேறு மாவட்டங்களில் அந்தப் பத்திரப் பதிவை மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடத்தப்பட்டன. ஆனால், அந்த அனைத்து முயற்சிகளையும் தி.மு.க. அரசு முறியடித்தது. 9,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான இந்து சமய அறநிலையத்துறைச் சொத்துக்களை மீட்டிருக்கின்றோம்.

பட்டா மற்றும் சிட்டா போன்றவற்றில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்ததையும் கண்டறிந்து, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம்.

ஸ்ரீரங்கம் கோபுரத்தைப் பொறுத்தவரை, 2023–ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அதன் ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளின் சில பாகங்கள் உதிர்ந்து, கோபுரம் சரிந்தது. அதை அறிந்தவுடனேயே, அன்றைய அமைச்சராக இருந்த கே.என்.நேருவும் நானும் நேரில் ஆய்வு செய்தோம். அப்போது ஜெயபால் என்பவர் ரூ.1.75 கோடி ரூபாய் செலவில் அதனைப் புதுப்பித்துத் தருவதற்கு அனுமதி கேட்டார். ஒரே மாதத்தில் அனுமதி வழங்கி பணிகள் முடிக்கப்பட்டன. ஆகவே, இந்தக் கோபுரப்பணிகள் எந்த வகையிலும் தாமதிக்கப்படவில்லை. அதற்கு ஸ்டிக்கர் ஒட்டத்தான் அமைச்சர் சென்றிருக்கிறார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் திறன் என்ன என்று ஒரு வருடத்தில் காட்டுவோம். அதிகாரிகளை மிரட்டுவது, "எடுத்தேன், கவிழ்த்தேன்" என்று பேசுவது மட்டுமே கையில் வைத்திருக்கிறார். திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றோம். அதை பார்த்தாலே, 50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய மக்கள் பணிகளை 5 ஆண்டுகளில் நிறைவேற்றிய ஆட்சி கடந்த திராவிட மாடல் ஆட்சி என்பது தெரியும்.

ஆன்மீகம் என்றாலே தி.மு.க. அதற்கு எதிரானது என்றொரு பிம்பத்தைக் கட்டமைத்திருந்தார்கள். அந்தப் பிம்பத்தை அடித்து நொறுக்கிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி.

இவ்வாறு அவர் கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் சென்னையில் மாநிலக் கல்லூரியில் போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் காணொலி காட்சி வாயிலாக மதுரை மாவட்டம், அமெரிக்கன் கல்லூரியில் இருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகர காவல் ஆணையாளர் எஸ்.இராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.தேவநாதன், மாநகராட்சி மேயர்(பொ)– துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், கல்லூரி மற்றும் பள்ளி மாணவ– மாணவிகள், அரசு அலுவலர்கள், தன்னார்வலர்கள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

## வெளிமாநிலங்களுக்கு கனிமங்கள் கொண்டு செல்ல தடை: தமிழக அரசுக்கு நோட்டீஸ்!

சென்னை, ஆக. 11–

தமிழகத்தில் உள்கட்டமைப்பு, நகரமயமாக்கல் பணிகளுக்கான கருங்கல் மற்றும் ஜல்லிக்கற்கள் போன்ற கட்டுமான பொருட்களின் தடையற்ற வினியோகத்தை உறுதி செய்யவும். செயற்கை விலையேற்றத்தை தடுக்கவும் தமிழ்நாடு சட்ட விரோத கனிமச்சுரங்கம், கனிம போக்குவரத்து மற்றும் சேமிப்பு, தடுப்பு விதிகளில் கடந்த ஜூலை 9–ந்தேதி திருத்தம் செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில், காரைக்கால், புதுச்சேரி தவிர பிற மாநிலங்களுக்கு கருங்கல், ஜல்லிக்கற்களை கொண்டு செல்ல 3 மாதங்களுக்கு தடை விதித்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை ரத்து செய்யக்கோரியும், விதிகளை செல்லாது என அறிவிக்கக் கோரியும் சென்னை ஐகோர்ட்டில் மது பிரேமநாதன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு தலைமை நீதிபதி தர்மாதிகாரி, நீதிபதி அருள் முருகன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, "தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள திருத்த விதிகளுக்கு ஜனாதிபதியிடம் ஒப்புதல் பெற வேண்டும். உரிய உரிமம் பெற்று எடுக்கப்பட்ட கனிமங்கள் எங்களுக்கு சொந்தமானது. அவற்றை எங்கு விற்க வேண்டும் என் பதை முடிவெடுக்க உரிமம் பெற்றவர்களுக்கு உரிமை உள்ளது.


அதனால், வெளிமாநிலங்களுக்கு கற்களை கொண்டு செல்ல தடை விதித்த அரசு உத்தரவை ரத்து செய்ய வேண்டும். தடை விதிக்கவேண்டும்" என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இதையடுத்து, இந்த மனுவுக்கு 2 வாரங்களில் பதிலளிக்கும்படி தமிழ்நாடு அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை தள்ளிவைத்தனர்.

## ஆடி அமாவாசை: ராமேசுவரம் கோவிலில் பகல் முழுவதும் நடைதிறப்பு...!

ராமேசுவரம், ஆக. 11–

ராமேசுவரம் ராமநாதசுவாமி கோவிலில் இந்த ஆண்டுக்கான ஆடித்திருக்கல்யாண திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 6–ம் நாளான நேற்று காலையில் அம்பாள் தங்கப்பல்லக்கிலும், இரவில் தங்க ரிஷப வாகனத்திலும் எழுந்தருளி வீதிஉலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

7–ம் நாளான (செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு அம்பாள் தங்கக்குதிரை வாகனத்தில் திட்டக்குடி மேலதெருவில் உள்ள மண்டகப்படிக்கு எழுந்தருளும் நிகழ்ச்சி நடக்கிறது. அதனால் இன்று மாலை 5 மணி முதல் இரவு வரையிலும் பக்தர்கள்



கோவிலில் சாமி தரிசனம் செய்ய அனுமதி இல்லை.

ஆடி அமாவாசை அன்று காலை 11 மணிக்கு தங்க கருட வாகனத்தில் அக்னிதீர்த்த கடற்கரைக்கு ராமபிரான், தீர்த்தவாரி பூஜைக்கு எழுந்தருளும் நிகழ்ச்சி நடக்கிறது. தொடர்ந்து இரவு வெள்ளி தேரோட்டம் நடைபெறுகிறது.

வழக்கமாக அதிகாலை 3 மணிக்கு திறக்கப்படும் கோவில் நடையானது பகல் 1 மணிக்கு சாத்தப்படும். பின்னர் 3 மணிக்கு திறக்கப்படும். ஆனால் ஆடி அமாவாசையை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் திரள்வார்கள் என்பதால், நாளை அதிகாலை 3 மணிக்கு திறக்கப்படும் நடையானது பகல் 1 மணிக்கு சாத்தப்படாமல் இரவு 8 மணிக்குத்தான் சாத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. திருவிழாவின் 9–ம் நாளான நாளை மறுநாள் காலை 9 மணிக்கு அம்பாள் தேரோட்டம் நடக்கிறது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக வருகிற 16–ந்தேதி இரவு 7 மணியில் இருந்து 8 மணிக்குள் ராம நாதசுவாமி– பர்வதவர்த்தினி அம்பாள் திருக்கல்யாண உற்சவம் நடக்கிறது. ஆடி அமாவாசையன்று பக்தர்கள் கூட்டநெரிசல் இன்றி சாமி தரிசனம் செய்யவும், தீர்த்தம் நீராடவும் கோவிலின் உள்பகுதி பிரகாரங்களில் பல்வேறு இடங்களில் தடுப்புக்கம்புகள் அமைக்கப்பட்டு உள்ளன. மேலும் பக்தர்கள் கூட்டத்தை கண்காணிக்க வசதியாக அக்னிதீர்த்த கடற்கரையில் தற்காலிக கண்காணிப்பு கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளது.

## ஆகஸ்ட் 15-க்குள் ஆதார் e-KYC முடிக்காதவர்கள் சிலிண்டர் வாங்க முடியாது.. முடிக்கும் நடைமுறை இதுதான்!

சென்னை, ஆக. 11–

இந்தியாவில் எல்பிஜி கேஸ் சிலிண்டர் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள், ஆதார் e–KYC சரிபார்ப்பை ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குகள் முடிக்க இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் மற்றும் எச்பிசிஎல் ஆகிய கேஸ் நிறுவனங்கள் கெடு விதித்துள்ளன.



e–KYC சரிபார்ப்பை முடிக்காதவர்களுக்கான கேஸ் விநியோகம் ஆகஸ்ட் 16 ஆம் தேதி முதல் நிறுத்தப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. அதாவது, அந்த தேதிக்கு பின் புதிய சிலிண்டர்களை வாடிக்கையாளர்களால் வாங்க முடியாது என்ற சூழல் உருவாக வாய்ப்புள்ளது.

அமெரிக்கா– ஈரான் இடையே ஏற்பட்ட போர் சூழல் காரணமாக சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதன் காரணமாக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டது. மேலும் சிலிண்டர் முன்பதிவு செய்யும் விதிமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டது.

கறுப்புச் சந்தையில் சிலிண்டர் விற்பனை செய்யப்படுவதை தடுக்க KYC விதிகள் கடுமையாக்கப்பட்டன.

பிரதமரின் உஜ்வாலா யோஜனா பயனாளிகள் மற்றும் இண்டேன், ஹெச்பி, பாரத் கேஸ் உள்ளிட்ட வழக்கமான கேஸ் சிலிண்டர்கள் பயன்படுத்தும் நுகர்வோர் என வீட்டு உபயோகத்திற்காக எல்பிஜி கேஸ் சிலிண்டர் இணைப்பு பெற்றுள்ள வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்களின் பயோமெட்ரிக் ஆதார் மூலம் KYC–யை புதுப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது. வரும் ஆகஸ்ட் 15க்குள் இதை செய்து முடிக்காதவர்களுக்கு புதிய கேஸ் சிலிண்டர் வாங்குவதில் சிக்கல் ஏற்படலாம் என கூறப்படுகிறது. அதாவது கேஸ் முன்பதிவு செய்யும் சேவை சரிபார்ப்பு செய்யாதவர்களுக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, அவர்கள் சரிபார்ப்பை முடித்த பின்னர் மீண்டும் வழங்கப்படலாம்.

மானிய விலையில் அல்லது குறைந்த விலையில் கேஸ் சிலிண்டர்களை முன்பதிவு செய்யும் தகுதியையும் வாடிக்கையாளர்கள் இழக்கலாம். உஜ்வாலா திட்ட பயனாளிகளுக்கு கிடைக்கும் சிலிண்டருக்கும் மானிய தொகை வரமால் போக வாய்ப்புள்ளது.

இருப்பினும் இதுகுறித்து உறுதிப்படுத்தல் ஏதும் இல்லை. தற்போதைக்கு கெடு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது.

கூகுள் பிளே ஸ்டோரில் நீங்கள் பயன்படுத்தும் கேஸ் நிறுவனத்தின் செயலியை ( hp pay, indianoil one, hello bpcl) –ஐ டவுன்லோட் செய்து அதில் மொபைல் எண், நுகர்வோர் எண்–ஐ உள்ளிட்டு லாகின் செய்யவும்.

Update e–KYC என்பதை கிளிக் செய்து, உங்கள் ஆதார் எண்ணை உள்ளிடவும். இதன்பின் மீண்டும் பிளே ஸ்டோருக்கு சென்று AadhaarFaceRD என்ற அதிகாரபூர்வ செயலியை பதிவிறக்கவும்.

அந்த செயலி மூலம் உங்கள் முகத்தை ஸ்கேன் செய்து ஆதார் அடிப்படையிலான பயோமெட்ரிக் சரிபார்ப்பை முடிக்கவும்

ஆன்லைனில் முடிக்க தெரியாதவர்கள் சிலிண்டர் விநியோகம் செய்யும் நபர்கள் மூமோ அல்லது கேஸ் நிறுவனத்திற்கு நேரடியாக சென்றோ e–KYC முடிக்கலாம். அதேநேரம் ஏற்கனவே, e–KYC சரிபார்ப்பை முடித்தவர்கள் மீண்டும் செய்யத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது சென்னையில் வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.957.50க்கு விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## மின்வாரிய இணையதள சேவைகள் முடங்கியது!

சென்னை, ஆக. 11–

தமிழ்நாடு மின்வாரியத்தின் இணையதள சேவைகள் திங்கள்கிழமை மாலை முதல் முடங்கியுள்ளதால் மின்வாரிய சேவைகளை மக்கள் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், திங்கள்கிழமை (ஆக.10) மாலை 4 மணி முதல் செவ்வாய்க்கிழமை காலை வரையிலும் இணையதள சேவைகள் முடங்கியே




உள்ளது. இதனால் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். இது குறித்து தமிழ்நாடு மின்வாரிய இணையதளத்தில் குறிப்பிடப்பட்ட புகார் அலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு கேட்டால் உரிய பதில் கிடைக்கவில்லை. இதனால், சம்பந்தப்பட்ட மின்வாரிய உயர் அதிகாரிகள் முடங்கிய மின்வாரிய இணைய தளத்தை சீரமைக்க விரைந்து நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அதிகாரப்பூர்வமாக அறிவிப்பதற்கு முன்பே எபோலா பரவல் தொடங்கிவிட்டது: உலக சுகாதார மையம்!

காங்கோ, ஆக. 11–

காங்கோவில் வேகமாக பரவி வரும் எபோலா பாதிப்பு, அது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு மாதங்களுக்கு முன்பே தொடங்கி விட்டதாக உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவித்துள்ளது. கிழக்கு காங்கோவில் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர சுகாதார பணியாளர்கள் போராடி வரும் நிலையில், இதுவரை பதிவானவற்றிலேயே மிக வேகமாக பரவும் எபோலா பாதிப்பு, மே மாத மத்தியில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு மாதங்களுக்கு முன்பே, அதாவது பிப்ரவரி மாதத்திலேயே தொடங்கியதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.




ஆப்பிரிக்காவுக்கான உலக சுகாதார அமைப்பின் பிராந்திய இயக்குனர் டாக்டர் முகமது யாகூப் ஜனபி செய்தியாளர் சந்திப்பில் பேசும் போது, மரபணு வரிசைமுறை ஆய்வு மூலம் இந்த பாதிப்பு தொடங்கிய காலம் கண்டறியப்பட்டதாக கூறினார். ஆரம்பக்கட்ட பாதிப்புகளில் சில, மலேரியா மற்றும் டைபாய்டு போன்ற பிற நோய்களால் ஏற்பட்டவை என்று தவறாக கருதப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். "நாங்கள் வைரஸ்–ஐ துரத்தி கொண்டிருக்கிறோம், ஆனால் வைரஸ் நம்மை விட முன்னால் சென்று கொண்டிருக்கிறது," என்று ஜனபி கூறினார். எபோலா தடுப்பு நடவடிக்கைகளுக்கான உலக சுகாதார அமைப்பின் பொறுப்பாளர் டாக்டர் தியர்னோ பால்டே கூறும் போது, காங்கோவின் தேசிய உயிரி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் ஆய்வு துறை தலைவர் டாக்டர் ஸ்டீவ் அஹுகா தலைமையில் இந்த மரபணு வரிசைமுறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

அரசின் சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, இந்தப் பாதிப்பில் உறுதிப்படுத்தப்பட்ட எபோலா நோயாளிகளின் எண்ணிக்கை 4,200–ஐ எட்டியுள்ளது; இதில் 1,900–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

எபோலா வைரஸ் காற்று வழியாக பரவாது என்பதால், சுவாச மண்டலத்தை தாக்கும் வைரஸ்களை விட இது பரவுவது மிகவும் கடினம். எனவே, இதன் உலகளாவிய பரவல் அபாயம் குறைவு என்று உலக சுகாதார அமைப்பு மதிப்பிடுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிக்கு வெளியே கண்டறியப்பட்ட நோயாளிகள் உடனடியாக அடையாளம் காணப்பட்டு, நோய் மேலும் பரவாமல் தடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மே 15–ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்ட இந்த பாதிப்பு, முந்தைய எபோலா பாதிப்புகளில் இருந்து மாறுபட்டது. ஏனெனில், இதற்கு காரணமான அரிதான 'புண்டிபுக்யோ' (Bundibugyo) வைரஸ்–க்கு அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளோ அல்லது சிகிச்சைகளோ இல்லை.

ஆரம்பக்கட்ட சோதனைகள் மிகவும் பொதுவான வகை எபோலா வைரஸ்க்காக மேற்கொள்ளப்பட்டதே தாமதத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது.

## ஆந்திர அரசு பிடித்து வைத்துள்ள விசை படகுகளை விடுவிக்க கோரி மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டம்!

சென்னை, ஆக. 11–

சென்னை மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே, காசிமேடு பகுதியில் உள்ள அனைத்து விசை படகுகள் சங்கம், பைபர் படகுகள் சங்கம், மற்றும் வியாபாரிகள் சங்கம் ஆகிய சங்கத்தினர் இணைந்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில், 7 சங்கங்கள் கலந்து கொண்டது. ஆர்ப்பாட்டத்திற்கு ரகுபதி தலைமை வகித்தார். குப்பன், விஜேஸ், ரகுநாத், பாபு, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பினர். இதுகுறித்து காசிமேடு அனைத்து மீனவர் சங்க கூட்டமைப்பினர் கூறுகையில், 'கடந்த மாதம் காசிமேட்டில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 7 விசை படகுகளை ஆந்திர போலீசார் சிறைபிடித்து வைத்துள்ளனர். இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதுகுறித்து ஆந்திர அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தியும்



எந்த பயனும் இதுவரை இல்லை. சென்னை மாவட்ட கலெக்டரை சந்தித்து விசை படகுகளை மீட்டு தர கோரி கோரிக்கை மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிறைபிடிக்கப்பட்ட விசை படகுகளை விடுவிக்க வலியுறுத்தி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் காசிமேடு அனைத்து மீனவர் சங்கத்தினர் ஈடுபட்டடோம்.

ஆந்திர அரசை கண்டித்தும், தமிழக முதல்வரின் கவன ஈர்ப்பு போராட்டமும் நடத்தினோம், சிறைபிடிக்கப்பட்ட எங்களது விசை படகுகளை பேச்சுவார்த்தை மூலம் தமிழக அரசு மீட்டுத்தர வேண்டும், விசைபடகு உரிமையாளர்கள், படகில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள், குடும்பத்தினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஆந்திர மாநில அரசும், தமிழக அரசும் நினைவில் கொள்ள வேண்டும். தமிழக மீனவர்கள் அண்டை மாநில போலீ சாரால் தாக்கப்படுவது, பல லட்சம் மதிப்புள்ள அவர்களது படகுகள் சேதப்படுத்துவது, பறிமுதல் செய்வது போன்ற செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால்,மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப் பதுடன், பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது. எனவே, இந்த விஷயத்தில் ஒன்றிய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுத்து, மீனவர்களை பாதுகாக்க வேண்டும்,' என்றனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020